RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s710

# நாவலாசிரியர் திலகவதி அவர்கள் விருது பெற்ற நாவல்களில் தனிமனித உளவியல்

**பா.றோ. சுபத்ரா** [அ, *]

[அ] சுயாதீன ஆய்வாளர், வாழவிளை வீடு, கன்னியாகுமரி-629171, தமிழ்நாடு, இந்தியா.

# Individual Psychology in Novelist Thilagavathi's Award Winning Novels

**P.R. Subathra** [a, *]

[a] Independent Researcher, Vallavilai Veedu, Kanyakumari-629171, Tamil Nadu, India

* Corresponding Author: subathraarul1980@gmail.com

Received: 18-12-2021
Revised: 28-04-2022
Accepted: 18-05-2022
Published: 13-07-2022

Check for updates

**ABSTRACT**

This article that is entitled "Individual Psychology in Award-Winning Novels" deals with novelist Thilagavathi and other personal behaviors such as the rise of love, greed, and self-confidence. Writer Thilagavathi has created a name for herself in the world of Tamil literature; she has given new ideas through Modern Tamil literature to protect the welfare of the people. Her works are mostly women-centric and explore their social issues. When researching them from a psychological perspective, the mentality of the creator and the mentality of the characters are evident. Generally, individual problems may naturally arise at works. In this way, this article examines the behavior of the individual based on the events of personal thoughts, actions, and depictions of inner memories found in Thilagavathi's novels 'Pathini Pen' (The Virtuous Woman) and 'Kalmaram' (The Stone Tree).

**Keywords:** Thilagavathi, Pathini Pen, Personal Behaviors, Modern Tamil Literature

## முன்னுரை

காலச்சக்கர சுழற்சியின் தடயங்களைப் பதிவு செய்பவை இலக்கியங்கள். சமூகத்தின் பிரச்சனைகள் மட்டுமல்லாது மனிதர்களின் யதார்த்த வாழ்க்கையையும் இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. அதனடிப்படையில் தான் பார்த்த மனிதர்களின் வாழ்வினை படம் பிடித்துக் காட்டும் திலகவதியின் கல்மரம், பத்தினிப் பெண் நாவல்களை உளவியல் நோக்கோடு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பத்தினிப்பெண் நாவல் திரைப்படமாக வெளிவந்தது. அத்திரைப்படத்தை சிறந்த திரைப்படமாக அங்கீகரித்து தமிழக அரசு நான்கு விருதுகளை வழங்கி கவுரவித்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் குறிப்பிடுகின்றன. 2005 ஆம் ஆண்டு 'கல்மரம்' நாவலுக்காக நாவலாசிரியர் சாகித்திய அகாடமி விருது பெற்றுள்ளார் (Thilakavathi, 2005).

மனித இயல்புகள் ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றன. 'எந்தவொரு படைப்பாளியும் உளவியலைத் தனியே கற்பதில்லை. வேண்டுமென்று புகுத்திப் பாடுவதில்லை' என்னும் கருத்திற்கேற்ப படைப்புகளின் ஊடே உளவியல் இருக்கக் காணலாம். பொதுவாகப் படைப்புகளில் தனிமனிதப் பிரச்சினைகள் இயல்பாக வெளிப்படக் கூடும். இவ்வகையில் பத்தினிப்பெண், கல்மரம் நாவலில் தனிமனித நடத்தைகள் உளவியல் நோக்கில் ஆராயப்படுகின்றன.

## ஆழ்மன உணர்வுகள்

கல்மரம் என்னும் நாவலில் தன்னால் தன்னைச் சுற்றியிருப்பவர்களுக்கும் வேதனை அதிகரிக்கிறதே என்ற மன உளைச்சலில் துன்புறும் வகையில் கன்னியம்மாள் என்ற பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது. புருஷன் வீட்டில் மரியாதை கிடைக்காமலும், பிறந்த வீட்டில் எடுத்துச் சொல்ல முடியாமலும், கர்ப்பிணியாக இருந்தும் கட்டிட வேலை செய்ய வேண்டிய சூழ்நிலையில் கன்னியம்மாள் வாழ்கிறாள். தன் வயிற்றுக்காகவும், தன் குழந்தைக்காகவும் ஓய்வே இல்லாமல் வலியோடு வேலை செய்து நாட்களைக் கடத்துகிறாள். ஒரு புதிய தலைமுறை இந்தப் பூமியைத் தொட்டுப் புதிய காற்றை சுவாசித்து அது அழுத அழுகை ஒரு விடியலின் கீதமாகவே வடிவங்கொண்டது" என்ற படைப்பாசிரியரின் வரிகள் கன்னியம்மாளின் மன உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது (Thilakavathi, 2004).

மேலும் முதலாளி சுசுஆ தொழிலில் குளறுபடி நடந்ததாக நினைத்து தான் முதலாளி என்ற எண்ணம் மேலோங்க அதிக அளவு நம்பிக்கை வைத்திருந்த காசியின் கன்னத்தில் அறைகிறார். "தொள்ளாளி இல்லாம எப்படி மாடி வீடும் மச்சு வீடும் கட்டிடுவாங்க பார்க்கலாம். இவுங்க கையில இருக்கிற துட்டும் பாங்கிலிருக்கிற துட்டும் வந்து சாரத்து மேல நின்னுக்கினு வேல செய்யுதான்னு பார்க்கலாம். நம்மள அவங்களே வந்து கூப்பிட்டுத் தான் ஆவணும். அப்ப நாம்ப ஒத்தாசையா இருக்கணும்" என்ற வரிகள் தொழிலாளர்களின் மன உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றன (Thilakavathi, 2004).

## அன்பின் உயர்வு

அன்பு என்பது நெருக்கமான உள்ளப்பிணைப்பு தொடர்பான ஓர் உணர்வும் அனுபவமும் ஆகும். தாய் மீதான அன்புக்கு சிறப்பான இடம் உண்டு. அன்பு அதன் பல்வேறு வடிவங்களில் மனிதர்களிடையேயான தொடர்புகளை வலுப்படுத்தும் ஒரு காரணியாக உள்ளது. அன்பின் உளவியல் முக்கியத்துவம் காரணமாக ஆக்கக் கலைகளில் அது ஒரு முக்கியமான கருப்பொருளாக ஆளப்படுகிறது.

அளவுக்கதிகமான அன்பும் கூட சில சமயங்களில் உளச்சிக்கலை உருவாக்குகிறது. கல்மரம் நாவலில் வரும் காசியின் தாய் ஆதிலட்சுமி தனது மகனின் மேல் அளவு கடந்த பாசம் வைத்திருந்தாள். தனது கணவன் கட்டிட விபத்தில் இறந்துவிட்டதால் தனது மகன் காசியை கட்டிட வேலைக்கு அனுப்பத் தயங்குகிறாள். தினமும் தனது மகனுக்கு ஏதாவது வேலை கிடைக்குமா என்ற ஏக்கத்திலேயே நாட்களைக் கடத்துகிறாள். தனது மகனுக்கு வேலை இல்லாவிட்டாலும் பரவாயில்லை. கட்டிட வேலைக்கு மட்டும் அனுப்பக்கூடாது என்று எண்ணும் தாய் ஆதிலட்சுமியின் அளவு கடந்த அன்பும் காசியை உளச்சிக்கலுக்கு ஆளாக்குவதைக் காணலாம்.

## பேராசை

வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பணம் இன்றியமையாதது. 'பணம் பத்தும் செய்யும்' என்பது பழமொழி. வாழ்க்கையில் தேவைகள் அதிகரிக்கும்போது பணத்துக்கான தேவையும் அதிகரிக்கிறது. வசதியான வாழ்க்கை வாழ பணத்தை மனிதன் சம்பாதிக்கிறான். அதிகப்படியான பேராசை குடும்பத்திற்குள் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

பத்தினிப்பெண் என்னும் நாவலில் வரும் வாணி என்ற பாத்திரப்படைப்பு பேராசையால் சமுக அந்தஸ்தைப் பெற விரும்பும் கதாப்பாத்திரமாக அமைந்துள்ளது.

கவிதாவின் நெருங்கிய தோழியான வாணி ஒரு விடுதியை நடத்தி வந்தாள். ஊழியர்களிடம் அவள் நடந்துகொள்ளும் விதமும் விடுதியை அவள் நிர்வகிக்கும் திறமும் கவிதாவை வெகுவாகக் கவர்ந்தன. வாணி தனது வருமானத்தில் ஒரு பகுதியை அழகு நிலையங்களில் செலவழிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தாள். கவிதாவின் கணவனான ரங்கதுரை வாணியிடம் கதகளி ஆட்டக்காரர்களைப் போல அலங்காரம் செய்து கொள்வது நன்றாக இல்லை என்று தெரிவித்தபோது

“என்னுடைய தன்னம்பிக்கையை வளர்க்கறதுக்கு இந்த மாதிரி அலங்காரம் எனக்கு தேவைப்படுது” என்று வாணி கூறுகிறாள். எப்போதும் ஆடம்பர மோகம் கொண்டிருக்கும் வாணி பேராசையின் காரணமாகத் தனது விடுதியில் தவறான வேலை செய்து போலீசிடம் சிக்கிக்கொண்டாள் (Thilakavathi, 2004).

## பாலின வேற்றுமை

ஆதிக்கத்தை குறிக்கொண்டு சமத்துவத்தை மறுத்து ஒடுக்குவதன் அடிப்படையில் ஆணாதிக்கத்தை நிறுவும் தந்தை வழி சமூக முயற்சியே பாலின வேற்றுமை.

“வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்” (Puliyur Kesikan, 2008)

என்ற எண்ணப்போக்கு சங்க காலக் கவிதையின் வெளிப்பாடாயினும் தந்தை வழி சமூக அமைப்பு மாறாத இக்காலம் வரை அதன் செல்வாக்கு தொடர்கிறது.

ஆனால் திலகவதியின் கல்மரம் நாவலில் வரும் ராகினி படித்த வசதி வாய்ப்புள்ள வீட்டிலிருந்து வறுமையில் வாடும் வீட்டில் வாழ வந்த மருமகளான பெண் தனது முயற்சியால் குடும்பத்தில் சில மாறுதல்கள் ஏற்பட வேண்டும் என்று நினைக்கிறாள். தனது கணவன் வேலையின்றி இருப்பதால் ஏற்படும் மனப்போராட்டங்களைத் தவிர்ப்பதற்காக தனக்குக் கிடைக்கும் வேலையைச் செவ்வனே செய்து முடிக்கும் எண்ணத்தில் தனது முயற்சியில் அடியெடுத்து வைக்கிறாள். தான் படித்த படிப்பு வீணாகிவிடக் கூடாது என்பதற்காகத் தானாகத் தேடி வந்த வேலையை மன மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளும் ராகினியின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் படைப்பாசிரியர்.

## தன்னம்பிக்கை

தன்னம்பிக்கையே ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஆணிவேராக உள்ளது.

‘நம்பிக்கை நார் மட்டும்

நம் கையில் இருந்தால்

உதிர்ந்த மலர்கள் ஒவ்வொன்றும்

தானாய் வந்து ஒட்டிக்கொள்ளும்’

என்ற வரிகள் ஒரு மனிதனின் வாழ்வில் தன்னம்பிக்கை இன்றியமையாதது என்பதை உணர்த்துகின்றன.

பத்தினிப்பெண் நாவலில் வரும் கவிதா தனக்குத் துணையாய் இருந்த தந்தை கந்தசாமியின் இழப்பால் மனமுடைந்து போயிருந்தாள். உறவுகள் அனைத்தும் கைவிட்டுப் போன நிலையில் கூட கவிதாவின் வெளிநாட்டுத் தோழியான சல்மாவின் கடிதத்தால் புத்துணர்வு பெற்ற கவிதா எழுத்துலகில் மீண்டும் தடம் பதிக்க வேண்டுமென எண்ணுகிறாள். பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த கவிதாவின் மனதில் மீண்டும் சொற்கள் கவிதையாகப் புரண்டதாக படைப்பாசிரியர் தெரிவிப்பதிலிருந்து கவிதாவின் தன்னம்பிக்கை உணர்வு புலனாகிறது.

## சந்தேக மனப்பான்மை

உறவுகளானாலும் சரி, நட்புகளானாலும் சரி மனம் விட்டுப் பேசும்போது மட்டுமே பலம் பெறுகின்றன. சந்தேகக் கண்ணாடியை வைத்துப் பார்க்கும்போது எதற்கும் எத்தனை தவறான அர்த்தங்களும் நம்மால் காண முடியும். இந்த முட்டாள்தனத்தில் பலியாவது தனிமனிதன் மட்டுமின்றி உறவுகளும், நட்புகளும், அவர்களின் சந்தோஷங்களும் தான்.

சந்தேக மனப்பான்மை மனிதர்களிடையே பொதுவாகக் காணப்படுவதை தமது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார் படைப்பாசிரியர். கவிதாவின் கணவனான ரங்கதுரை மனைவியின் மீது சந்தேகம் கொண்டவனாக அவளை வேதனைப்படுத்துபவனாக இருந்தான். இதனால் கவிதா மனமுடைந்து காணப்பட்டாள்.

மேலும் தனது நண்பனான பிரபு வாணியின் வீட்டிற்கு வந்ததை அறிந்த கவிதா வாணிக்கும் பிரபுவுக்கும் தவறான உறவு இருப்பதாக சந்தேகப்பட்டு பிரபுவுடனான நட்பை முறித்துக்கொள்கிறாள். சந்தேக நோய் மிகவும் கொடியது என்பதை கவிதா - பிரபு பாத்திரப் படைப்புகள் மூலம் விளக்குகிறார் படைப்பாசிரியர்.

## பழிவாங்கும் உணர்வு

இல்லற வாழ்வில் ஆணும் பெண்ணும் சம உரிமை உடையவர்கள் என்று கூறினாலும் ஆண்களுக்கு அடங்கி நடக்கும் பெண்களே அதிகம் உள்ளனர். சமுதாயத்தில் பெண்கள் சுதந்திரமாய்ப் பேசவோ செயல்படவோ ஆண்கள் அனுமதிப்பதில்லை. பெண்கள் சுயமாக சிந்தித்து செயல்படும் சமயத்தில் ஆண்கள் அவர்களின் முன்னேற்றத்தை ஏற்றுக்கொள்ளாமல் பழிவாங்கும் திட்டத்துடன் செயல்பட ஆரம்பிக்கின்றனர். பழிவாங்கும் உணர்வு எல்லா ஆண்களிடமும் பொதுவாகக் காணப்படுவதை "மாதர்கள் வீட்டு அடிமைகள் என்று அழைக்கப்படுவதில் வியப்பில்லை, நாகரீகம் அடைந்த எல்லா நாடுகளிலும் மிகவும் முன்னேற்றம் அடைந்த நாடுகளிலும் கூட மாதர்களின் நிலை இவ்வாறு தான் உள்ளது" என்கிறார் (Lenin, 1972).

பத்தினிப்பெண் நாவலில் வரும் கவிதாவின் கணவன் ரங்கதுரை அவளை சந்தேகப்பட்டான். அதனால் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு ரங்கதுரை கவிதாவின் வீட்டைவிட்டு வெளியேறும்படி ஆனது. இதனால் கவிதாவைப் பழிவாங்க திட்டமிட்டான். கவிதாவின் தந்தை அவளிடம் "நம்மை நிம்மதியா வாழ விடமாட்டானாம். நீ வேலை செய்ற இடத்திலே வந்து அவமானப்படுத்துவானாம். நீ வேற எங்கே போய் வேலை செய்தாலும் அங்கே வந்து கலாட்டா செய்வானாம். அவன் உன்னை கொலை செய்யப் போவதில்லையாம். அவன் படுத்தி வைக்கிற பாட்டிலே நீயா மனசு வெறுத்துப்போய் தற்கொலை பண்ணிக்கணுமாம். அவமானத்துல குறுகிக் குறுகி கூட்டுக்குள்ள இருக்கிற நத்தை மாதிரி நீ தலையை வெளியே காட்டவே சங்கடப்படணுமாம்" எனக் கூறுகிறார் (Thilakavathi, 2004).

குடும்ப வாழ்க்கையில் ஒரு ஆண் தன் வாழ்க்கையிலிருந்து விலகிச்சென்ற பெண்ணை ஏற்றுக் கொள்ளவோ மன்னிக்கவோ இடம் அளிக்காமல் அவளைப் பழிவாங்கும் எண்ணத்திற்கு மட்டுமே இடமளிப்பதை ரங்கதுரை பாத்திரப்படைப்பு மூலம் சித்தரித்துள்ளார் படைப்பாசிரியர்.

## பொறுமைக்குணம்

பெண்ணிற்கு அழகு பொறுமை என்பர். 'பொறுத்தார் பூமி ஆள்வார்', 'பொறுமை கடலினும் பெரிது' என்று பொறுமை என்ற தனிமனித குணத்தைப் பற்றி முன்னோர்கள் கூறியுள்ளனர். மனிதன் கடைபிடிக்க வேண்டிய நல்ல குணங்களில் மிகவும் முக்கியமானது பொறுமையே. பெண்களின் பொறுமை வீட்டிற்கு அழகு தரும் என்பதால் பொறுமை பெண்களின் அணிகலனாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்கள் தமது கணவன் தரும் தொல்லைகளை சகித்துக் கொள்ள பொறுமை இன்றியமையாத அணிகலன் ஆகின்றது. "பொறுமையினால் ஆண்களைத் திருத்த வேண்டும் என்பதை "பெண்கள் பொறுமையைத் தங்கள் அணிகலனாகக் கொள்ள வேண்டும். நல்ல நூல்களைக் கசடறக் கற்று கற்ற வழியில் நிற்கப் பழகுதல் வேண்டும். இன்சொல்லையும் நல்லொழுக்கத்தையும் தம் உயிராகக் கொள்ள வேண்டும். பெரியோர் வார்த்தைகளை அமுதாகக் கைக்கொள்ள வேண்டும். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த வேண்டும். மாதர்கள் ஆடவர்களின் கால்பந்து அல்ல என்பதைப்

பெண்கள் தங்கள் குணநலன்களால் நற்காரியங்களால் வெளிப்படுத்த வேண்டும்” என்று சுந்தரமூர்த்தி கூறியுள்ளார்.

பத்தினிப்பெண் நாவலில் வரும் கவிதா காதலித்துத் திருமணம் செய்துகொண்ட ரங்கதுரை நாட்கள் செல்லச்செல்ல மிகவும் கொடூரமான முறையில் நடந்துகொண்டான். ரங்கதுரை செய்யும் எந்தவொரு செயலுக்கும் காரணம் புரியாமல் தவித்தாள் கவிதா. ரங்கதுரையைத் தனது மகனாகப் பாவித்து நடத்தும் தனது தந்தை கந்தசாமிக்கு எந்த விஷயமும் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக எல்லாக் கொடுமைகளையும் பொறுத்துக்கொண்டு வாழ்வதாகக் கூறுகிறார் படைப்பாசிரியர்.

## மடைமாற்றம்

“வாழ்வில் ஏற்படும் இடர்பாடுகள், தடைகள் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு மனிதனிடம் இயல்பாக அமையும் உள்ளார்ந்த பண்புகளை சமுதாய மதிப்புடன் ஏற்றுக்கொள்ளத் தக்க முறையில் மாற்றி அமைக்கும் திறனே மடைமாற்றம் ஆகும்” (Sampath Kumar, 1988). ஒவ்வொரு மனிதனும் தான் மனதில் கொண்ட எண்ணங்கள் நிறைவேறாத போது கிடைப்பதை ஏற்று மன நிறைவுடன் வாழ்வதே நல்லது.

பத்தினிப்பெண் நாவலில் வரும் கவிதா காதல் திருமணம் செய்துகொண்டவள். நாளடைவில் அவனது குணநலன்களைப் புரிந்துகொண்டு கலங்கிப்போனாள். தனது நம்பிக்கை வீணாகிப்போய்விட்ட நிலையிலும் மனம் தளராமல் தனது எழுத்துப் பணியை தொடர்ந்து செய்கிறாள். தனது தந்தையின் இழப்புக்குப் பின்னர் உறவுகளனைத்தும் கைவிட்ட நிலையிலும் ரங்கதுரையிடமிருந்து விவாகரத்து வாங்கி வாழ்வில் எதிர்நீச்சல் போட்டு முன்னேறத் துடிக்கிறாள்.

## பிறரது வலியில் மகிழ்ச்சி கொள்ளல்:

பிறரின் துன்பத்தைக் கண்டு இன்புறுதல் ஒரு வகையான பாலியல் முரண் செயல். பிறரை அடித்தல் அல்லது துன்புறுத்துவதன் மூலம் காமக் கிளர்ச்சியும் இன்பமும் பெறுவது அது. ‘வலியூட்டுவதன் மூலம் காம இன்பம் அடைதல், கொடுஞ்செயலால் அடையும் இயற்கைக்குப் புறம்பான இன்பம்’ என்று ளயனளைஅ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அகராதி பொருள் கூறுகிறது.

பத்தினிப்பெண் நாவலில் வரும் ரங்கதுரை பிறரது துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள்கிறான். ஏதாவது ஒரு காரணத்தைத் தேடிக் கண்டுபிடித்து எல்லோருடனும் சண்டை போடுவது அவனது சுபாவம். கசப்பையும் வெறுப்பையும் விரோதத்தையும் பழிவாங்கும் உணர்ச்சியையுமே உண்டு சுவாசித்து வாழும் அரக்க குணமுடையவன். வறுமையும் துயரமும் முதுமையும் வடிவங்கொண்டது போல் வயதானவர்கள் உதவிகேட்டு வந்தபோது அவர்களிடம் மிகவும் கடினமாக நடந்துகொள்கிறான். தனது மனைவி கவிதாவிடம் வாணி என்ற பெண்ணைப் பற்றி பெருமையாகப் பேசி அவளது வேதனையைக் கண்டு ஆனந்தம் கொள்கிறான்.

## துணையற்ற நிலை

தன்னிடம் அன்பு காட்டவோ, இரக்கம் கொள்ளவோ யாரும் இல்லை என்ற நிலையில் அமைதியற்ற வாழ்வு வாழும் மனிதர்களே அதிகம். துணையற்ற நிலையிலும் மன மகிழ்ச்சியுடன் வாழும் பெண்களும் இருக்கின்றனர். பத்தினிப்பெண் நாவலில் வரும் கவிதா தனது கணவனை விட்டுப்பிரிந்து சலனமின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறாள். ஆனால் தனது தாம்பத்திய வாழ்வின் சம்பவங்களை நினைக்கவும் துணிவற்றவளாய் வாழும் பெண் கதாபாத்திரமாக அமைந்துள்ளது கவிதா பாத்திரப்படைப்பு. கணவனைப் பிரிந்து வாழும் எந்தவொரு பெண்ணுக்கும் ஏற்படும் இன்னல்களை இந்நாவலில் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

## முடிவுரை

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவனால் தனித்து வாழ இயலாது. அவன் சமூக வாழ்க்கைக்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளான். வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்திற்கும் மனமே காரணமாக அமைகிறது. தனிமனிதன் தனது எண்ணங்களை அடக்கியாளும் போது தான் வாழ்வில் நல்ல நிலையை அடைய முடியும். தன்னிடம் அன்பு காட்டவோ, தன்னைக் கேள்வி கேட்கவோ யாரும் இல்லாத நிலையில் தனிமனிதன் எளிதில் தடம் புரள்கிறான். தனிமனிதனின் நல்ல நடத்தையே உளச்சிக்கல்களுக்குத் தீர்வாகும். மனவலிமையும், மனக்கட்டுப்பாடும் உள்ள மனிதனால் மட்டுமே தனது பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வு காண முடியும்.

## References


Lenin, (1972) Mother Viduthalai Patri, New Century Book House, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Kurunthogai Thelivurai, Paari Nilayam, Chennai, India.

Sampath Kumar, P., (1988) Mu, Va., PAthirangal oor thiranaivu, Rajiv Gandhi Pathippagam, Coimbatore, India.

Sundaramurthi, E., (2005) Magalir Ethalkal, International Institute of Tamil Studies, Chennai, India.

Thilakavathi, (2004) Pathini Pen, Pudumaipithan Pathippagam, Chennai, India.

Thilakavathi, (2005) Kalmaram, Amrudha Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License